## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## அப்பாவிகளுக்கு யார் துணை?

தேவர்களும் அசுரர்களும் தங்களுடைய சக்தியைப் பெருக்கிக் கொள்வதற்காக அம்ருதத்தை வேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அம்ருதம் கிடைத்தது, அதனுடன் பல்வேறு பொருள்களும் கிடைத்தன. மஹாவிஷ்ணு ஆமை வடிவம் தாங்கி அம்ருதம் கிடைக்க உதவினார். சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டு அனைவரையும் காப்பாற்றினார். மேலும் மஹாவிஷ்ணு மோகினி உருவம் கொண்டு அம்ருதத்தை தேவர்களுக்கு அளித்தார். ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது ஒவ்வொருவரும் தன்னால் முடிந்ததைச் செய்தல் மிக மிக முக்கியம்.

காரியம் முடிந்து அனைவரும் அவரவர் இருப்பிடம் சென்றனர். ஒருவர் மட்டும் எழுந்து நிற்பதற்குக் கூட பலம் இல்லாமல் துவண்டு கிடந்தார். யார் அது? அவர்தான் வாசுகி-அம்ருதத்தை கடைந்து எடுக்க மந்தார மலையை நட்டிய போது, அதை கடையக் கயிராக இருந்து உதவிய பெரிய நாகப்பாம்பு தான் வாசுகி. வாசுகி எப்போதும் யாருக்கும் சிறிது கூட தீமை நினைக்காதவர். அப்படி என்றால் இவர் ஏன் உலகத்து உயிர்களைக் கொள்ளும் கொடுமை மிக்க ஆலகால விஷத்தை கக்க வேண்டும்?இதற்கு பதில் யாருக்கு தெரியும்? ஸ்ரீமந்நாராயணனுக்கு மட்டும் தான் தெரியும்.

வாசுகி ஏன் இவ்வளவு சோர்வாக இருக்கிறார்? அம்ருதத்தைக் கடைந்தபோது வாசுகியைக் கயிறு போல மாற்றி மாற்றி இழுத்தார்கள். உலகத்திற்கு ஒரு நல்ல விசயம் நடக்க வாசுகி அனைத்தையும் தாங்கிக்கொண்டார். அவர் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் சிரத்தையுடன் செய்வார். அன்புடன் தன் கடமையை செய்து அதை இறைவனுக்கு அர்ப்பணிப்பார். தனக்கு என்று எதையும் எதிர்பார்த்து ஒரு காரியத்தைச் செய்யவே மாட்டார். ஆனால் உலகத்தில் குறும்புக்காரர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்?

மற்றவர்கள் அப்பாவியாக இருக்கும் போது அவர்களிம் அல்லவா இந்த குறும்புக்காரர்கள் தன்னுடைய பலத்தை காட்டுகிறார்கள்? இவர்களை என்ன செய்வது? அப்படிப்பட்ட குறும்புக்காரர் தான் வாலி. கிஷ்கிந்தா மலைப்பகுதியை ஆண்டவன் இந்த வாலி. அவன் தேவர்களுக்கு உதவிசெய்ய அம்ருதம் கடைய வந்தார். விருந்தாளியாக ஓர் இடத்திற்குச் சென்ற போது பேசாமல் இருக்க வேண்டாமா? ஆனால் என்ன செய்வது வாலியால் சும்மா இருக்க முடியவில்லை அப்பாவி வாசுகியைப் பார்த்தான். வாசுகியை இழுக்கும்

போது இவன் மட்டும் அதிகமான பலத்தைக் கொடுத்து இழுத்தான். வேண்டுமென்றே வாசுகியை அமுக்கினான், கசக்கினான், நகத்தால் கீறினான்.இதையெல்லாம் பொறுக்க முடியாமல் தான் வாசுகியும் ஆலகால விஷத்தை கக்கிவிட்டது. ஆலகால விஷம் பாம்பின் வாயிலிருந்து வெளியேவந்த காரணம் வாலிதான். பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ஆள் இல்லை என்ற குருட்டு தைரியத்தில் வாலி இவ்வாறு செய்தார். பாவம் வாலிக்குப் பெருமாள் சர்வசாட்சியாக அனைவருக்குள்ளும் இருந்து அவர் அவர் செயல்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்று புரியவில்லை.

வாசுகியிடம் இறைவன் அவன் வேண்டும் வரத்தை தருவதாக சொன்னார். உடல்வலி தீரும் வரை தான் தூங்கவேண்டும் என்று வரம் வாங்கிக்கொண்டான் வாசுகி. இறைவன் அதை அருளினார் ஒருவார்த்தைகூட தன்னைத் தொந்தரவு செய்த வாலியைப்பற்றி புகார் செய்யவே இல்லை. கிஷ்கிந்தா காட்டிற்குச் சென்று யாறும் வராத ஒரு இடத்தில் படுத்து உறங்கினான் வாசுகி. ஆனால் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பலனை அனுபவிக்க வேண்டுமல்லவா? வாசுகியை வாட்டிய வாலிக்கு உரிய பாடம் கற்பிக்க வேண்டும் என்று பெருமாள் நினைத்துக் கொண்டிருந்தார். காலம் சென்றது இறைவன் அடுத்த அடுத்த அவதாரங்கள் எடுத்தார்.வாலியும் தொடர்ந்து நீண்ட ஆயுளுடன் அந்த அவதாரங்களில் இருந்தான். அவன் அட்டகாசங்கள் மேன்மேலும் அதிகமானது. இராமாயண காலகட்டத்தில் வாலி சுக்ரீவனை அநியாகமாக தண்டித்ததும், சுக்ரீவன் மனைவி ருமையைக் கடத்திச் சென்றதும் மன்னிக்க முடியாத செயலாக மாறின. சீதையைத் தேடிக்கொண்டு இராமன் வந்தார்.ஹனுமான் மூலம் சுக்ரீவனோடு நண்பனானார். வாலியைப் பற்றித் தெரிந்து கொண்டார். கூர்ம அவதாரம் முதல் இராம அவதாரம் வரை வாழ்ந்தும் வாலி தன் புத்தியை மாற்றிகொள்ளவில்லை. அவனுடைய சுபாவம் மோசமடைந்துகொண்டே வந்தது. இதனால் உலகத்திற்கு கெடுதல்தான் அதிகம் என்று இறைவன் உணர்ந்தார். வாலியைக் கொல்ல முடிவுசெய்தார். அதற்கு முன் அவருடைய பலத்தைக்காட்ட ஒரே அம்பினால் ஏழு மரங்களை முறிந்து விழச்செய்தார். அது எப்படி?

சற்று முன்னும் பின்னுமாய் தள்ளித்தள்ளி இருந்த ஏழு மரங்களின் வேர்களுக்குக் கீழ் மண்ணுக்குள் வாசுகி உறங்கிக்கொண்டிருந்தான். இராமன் வந்ததை அவன் உணர்ந்தான். இராமனுக்கு உதவ அவன் உதவி செய்தான். ஆனால் அது வாலியைப் பழிவாங்கும் எண்ணத்தால் அல்ல. இராமன் அம்பை விட்டவுடன் நெளிந்து படுத்துக்கிடந்த தன் உடலை நேர் படுத்திக்கொண்டான். அதன் மூலம் ஏழு மரங்களையும் ஒரே நேர்கோட்டில் வேர் விலகி நின்றன. இராமனும் ஏழு மரங்களை அடியோடு வீழ்த்தினான்.அதன்பின்

வாலியைக்கொன்றான். வாலி தான் சாகும்முன் தன்னுள் வாழ்நாள் முழுவதும் செய்த தீயசெயல்களை எண்ணி வருந்தினான். அடுத்த பிறவியில் அத்தகைய செயல்களை செய்யகூடாத விழிப்புணர்வு வேண்டும் என்று ஸ்ரீஇராமனிடம் வேண்டி உயிர் விட்டான். அவனுடைய வேண்டுதல் பழிக்க வேண்டும் என்று வாசுகி ஆசீர்வாதம் செய்தார்.எனவேஅப்பாவிக்ளை ஒருபோதும் நாம் எந்த வகையிலும் துன்புறுத்தக் கூடாது.ஆனால் வாலியை ராமன் கொல்கிறான் என்ற சந்தோஷத்தில் வாசுகி அவ்வாறு செய்யவில்லை. வெறும் இறைவனுக்குச் செய்யும் சேவையாகவே செய்தார்.

எனவே இறைவன் அனைவரின் செயல்களையும் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்ற விழிப்புணர்வுடன் வாழவேண்டும்.

நன்றி